# A SURVEY ON ORGANIZATIONAL COMMITMENT OF DIVISIONAL SECRETARIES IN BATTICALOA DISTRICT

001.4039205493
BAL

LIBRARY
31-1-2000
Eastern University, Sri Lanka

MISS. SOMALINGHAM BALANANTHINI

231
Library - EUSL

35366

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA
1999.

## ஆய்வின் சுருக்கம்

மட்டக்களப்பு மாவட்ட பிரதேசசெயலாளர்களது நிறுவனரீதியான அர்ப்பணிப்பின் நிமித்தம் ஒவ்வொரு பிரதேசசெயலாளர்களின் நிறுவன அர்ப்பணிப்பு மூலம் பிரதேசஅபிவிருத்தியை மேற்கொண்டு பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச்செல்வதே ஆய்விற்குரிய பிரச்சினை ஆகும். பிரதேசசெயலாளர்களது செயற்திறனின்மைக்கு அவர்களது நிறுவனரீதியான அர்ப்பணிப்பு எவ்வாறு காணப்படுகின்றது. என்பதனை அறிவதற்காகவும் இம் மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காகவும் நிறுவனரீதியான அர்ப்பணிப்பு எந்தளவிற்கு உள்ளது என்பதை அறிவதே இவ் ஆய்விற்குரிய குறித்த பிரச்சினை ஆகும்.

மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பிரதேசசெயலாளர்களது நிறுவனரீதியான அர்ப்பணத்தின் முக்கியத்துவம் யாது? மாவட்ட அபிவிருத்தியில் நிறுவன ரீதியான அர்ப்பணிப்பு எவ்வாறு உள்ளது? பிரதேசங்களில் காணப்படுகின்ற வளங்கள் யாவும் பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதை அடையாளங்காணலே ஆய்வின் நோக்கங்களாகக் கருதப்படுகின்றன.

மாதிரித்தெரிவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் 12 பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 10 பிரதேச செயலாளர்களது பூர்த்தி செய்யப்பட்ட வினாக்கொத்துக்களே இவ் ஆய்விற்காகக் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. வினாக்கொத்தின் அடிப்படையில் நிறுவன ரீதியான அர்ப்பணிப்பு வினாக்கள், தன்னை நிறுவனத்துடன் அடையாளங்காணல், நிறுவனத்துக்கு விசுவாசமாக உள்ளமை, நிறுவனத்தின் வளர்ச்சிப்போக்கிலுள்ள அக்கறை என்ற மூன்று பரிமாணங்களுடன் தொடர்புபடுகின்றன.

பகுப்பாய்வு முறைமையாக விபரணப்புள்ளிவிபரவியலும் இணைவு ஆய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. இறுதியில் முடிவானது விரும்பத்தக்க அர்ப்பணிப்பாகவே காணப்படுகின்றது. இவ் அர்ப்பணிப்பை மேலும் அதிகரிப்பதற்காக எந்தத் துறையில் பயிற்சி தேவையாகவுள்ளதோ அதற்கான பயிற்சியினை வழங்குதல், கருத்தரங்குகளை நடாத்துதல், மேலும் சில நிதிசாரா வெகுமதிகளை வழங்குவதன் மூலமும் அதிகரிக்க முடியும்.

பிரதேச செயலாளர்களைப் பொறுத்தவரையில் நிறுவனரீதியான அர்ப்பணிப்பு விரும்பத்தக்க அர்ப்பணிப்பாகக் காணப்படுகின்றது. இவர்களது கடமை பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகும். எனவே இதனை அதிகரிப்பதற்காக சமூக நோக்கு இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| நன்றியுரை | | v |
| ஆய்வின் சுருக்கம் | | vi |
| பொருளடக்கம் | | vii |
| அட்டவணை விபரம் | | viii |
| வரைபட விபரம் | | viii |
| **அத்தியாயம் - 1** | | **1-15** |
| | அறிமுகம் | |
| 1.1 | பிரதேசசெயலாளரின் நிறுவனரீதியான அர்ப்பணத்தின் முக்கியத்துவம் | 5 |
| 1.2 | ஆய்விற்கான பிரச்சினை | 8 |
| 1.3 | ஆய்விற்கான குறித்த பிரச்சினை | 9 |
| 1.4 | ஆய்வின் நோக்கம் | 9 |
| 1.5 | ஆய்வு முறைமை | 10 |
| 1.6 | எண்ணக்கருவாக்கம் | 14 |
| 1.7 | எடுகோள்கள் | 14 |
| 1.8 | வரையறைகள் | 15 |
| **அத்தியாயம் - 2** | | **16-23** |
| | நூலாய்வு | 17 |
| **அத்தியாயம் - 3** | | **24-33** |
| | தரவுப்பகுப்பாய்வும் தரவுப்பிரதிநிதிப்படுத்தலும் | 25 |
| 3.1 | தனிப்பட்ட விபரப்பகுப்பாய்வு | 25 |
| 3.2 | நிறுவன ரீதியான அர்ப்பணிப்பு பற்றிய பகுப்பாய்வு | 29 |
| **அத்தியாயம் - 4** | | **34-40** |
| | விதந்துரைப்பு | 35 |
| **அத்தியாயம் - 5** | | **41-45** |
| | முடிவுகளும் சிபார்சுகளும் | 42 |
| 5.1 | முடிவுகள் | 42 |
| 5.2 | சிபார்சுகள் | 43 |
| 5.3 | IMPLICATION | 45 |
| | உசாத்துணை நூல்களும் சஞ்சிகைகளும் | **46** |
| | இணைப்புகள் | **47-49** |

அட்டவணை விபரம்

| | | |
|---|---|---|
| 3.1 | வயது | 25 |
| 3.2 | பால் | 26 |
| 3.3 | உயர்கல்வித்தகமைகள் | 27 |
| 3.4 | வேலை முன்னுரிமை | 28 |
| 3.5 | தன்னை நிறுவனத்துடன் அடையாளங்காணல் | 30 |
| 3.6 | நிறுவனத்திற்கு விசுவாசமாக உள்ளமை | 31 |
| 3.7 | நிறுவனத்தின் வளர்ச்சிபோக்கிலுள்ள அக்கறை | 32 |
| 3.8 | பிரதியீட்டுத்தன்மை | 33 |

வரைபட விபரம்

| | | |
|---|---|---|
| 3.1 | வயது | 26 |
| 3.2 | பால் | 27 |
| 3.3 | உயர்கல்வித்தகமைகள் | 28 |
| 3.4 | வேலை முன்னுரிமை | 29 |
| 3.5 | தன்னை நிறுவனத்துடன் அடையாளங்காணல் | 30 |
| 3.6 | நிறுவனத்திற்கு விசுவாசமாக உள்ளமை | 31 |
| 3.7 | நிறுவனத்தின் வளர்ச்சிபோக்கிலுள்ள அக்கறை | 32 |